# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் செய்தி மடல்

செய்தி 20 மடல் 2 பிப்ரவரி 2020 ₹1.00


## குடியரசு தின விழா



71ஆவது இந்தியக் குடியரசு தின விழா, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் தலைமை நிலையத்தில் 26.01.2020அன்று கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள், தேசியக் கொடியை ஏற்றிவைத்துக் குடியரசு தின உரை நிகழ்த்தினார். சிறப்பாகப் பணியாற்றிய பல்கலைக்கழகத்தின் 'சி' மற்றும் 'டி' பிரிவுப் பணியாளர்களைச் சிறப்பு செய்யும் வகையில் அவர்களுக்குச் சிறந்த பணியாளர் விருது வழங்கினார். முன்னதாகத் துணைவேந்தர் அவர்கள் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். மேலும், பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி முதல்வர்கள் தத்தம் கல்லூரி வளாகங்களில் தேசியக் கொடியை ஏற்றிவைத்தனர். பல்கலைக்கழகப் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் குடியரசு தின விழாவில் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.

## மண்டல அளவில் பண்ணையாளர்களுக்கான கருத்தரங்கு மற்றும் கண்காட்சி



கால்நடை அறிவியல் தமிழ் இயக்கமும், திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் இணைந்து கால்நடைப் பண்ணையாளர்கள் பயன்பெறும் வகையில் "அறிவியல் தொழில்நுட்பங்கள் மூலம் ஆட்டினங்களில் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்" எனும் மண்டல அளவில் பண்ணையாளர்களுக்கான கருத்தரங்கு மற்றும் கண்காட்சியை 03.01.2020 மற்றும் 04.01.2020ஆம் தேதிகளில் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தின. மாண்புமிகு தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி வி.எம். ராஜலட்சுமி அவர்கள் 03.01.2020அன்று கண்காட்சியைத் துவக்கிவைத்துச் சிறப்புரை ஆற்றினார். திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஸ் இ.ஆ.ப. அவர்கள் துவக்க விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றினார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் விழாவிற்கு முன்னிலை வகித்தார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள் திட்ட அறிக்கை அளித்தார்.

பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ந. பலராமன், கேரள அரசின் முன்னாள் முதன்மைச் செயலர் மருத்துவர் ச. சுப்பையா, பல்கலைக்கழகத்தின் மேலாண்மைக் குழு உறுப்பினர் மருத்துவர் நா. ஸ்ரீகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாகப் பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஆ.வே. ஓம்பிரகாஷ் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப் குமார் அவர்கள் நன்றி கூறினார். 04.01.2020அன்று நடைபெற்ற கருத்தரங்கின் நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் கருத்தரங்க மலர் வெளியிட்டு, விவசாயிகளுக்குப் பண்ணை இடுபொருட்கள் வழங்கி வாழ்த்திப் பேசினார். மாண்புமிகு தமிழ்நாடு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ, மாண்புமிகு தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி வி.எம். ராஜலட்சுமி ஆகியோர் சிறப்புரை வழங்கினர். முன்னதாகத் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் அ. பழனிசாமி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கருத்தரங்கின் அமைப்புச் செயலாளர் மற்றும் கால்நடை அறிவியல் தமிழ் இயக்கத் தலைவர் முனைவர் த. ரவிமுருகன் அவர்கள் நன்றி கூறினார்.

### பன்னாட்டுக் கருத்தரங்கு




சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள அடிப்படை அறிவியல் புலத்தின் கீழ் இயங்கும் கால்நடைப் பராமரிப்புப் புள்ளியியல் மற்றும் கணினிப் பயன்பாட்டியல் துறை மூலம் "கால்நடைகள், உணவுப் பாதுகாப்பு மற்றும் உணவு நலம் – சவால்கள், வாய்ப்புகள் மற்றும் உத்திகள்" எனும் பன்னாட்டுக் கருத்தரங்கு 28.01.2020 மற்றும் 29.01.2020ஆம் தேதிகளில் நடைபெற்றது. தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் தமிழ்நாடு மண்டலத் தலைமைப் பொது மேலாளர் திருமதி பத்மா ரகுநாதன் அவர்கள் 28.01.2020அன்று கருத்தரங்கைத் துவக்கிவைத்து, கருத்தரங்க மலரினை வெளியிட்டார். துவக்க விழாவிற்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலசந்திரன் அவர்கள் தலைமை வகித்தார். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் உதவித் தலைமை இயக்குநர் (கால்நடை உற்பத்தி மற்றும் இனப்பெருக்கம்) முனைவர் ரவீந்தர் சிங் காந்தி, மத்திய அரசின் வர்த்தக மற்றும் தொழில் அமைச்சகத்தின் ஏற்றுமதி ஆய்வு மன்றக் கூடுதல் இயக்குநர் மருத்துவர் ஜே.எஸ். ரெட்டி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கருத்தரங்கின் அமைப்புச் செயலாளர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் ஜி. சரத்சந்திரா அவர்கள் நன்றி கூறினார். இக்கருத்தரங்கில் ஐந்து வெளிநாட்டு வல்லுநர்கள் மற்றும் ஆறு சிறப்பு அழைப்பாளர்கள் உட்பட, 148 அறிவியலாளர்கள் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினர். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் 29.01.2020அன்று நடைபெற்ற கருத்தரங்கின் நிறைவு விழாவிற்குத் தலைமை வகித்தார். கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் முனைவர் வே. அப்பாராவ் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள் கருத்தரங்க நிறைவுரை ஆற்றி, சிறந்த ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

### கல்லூரி, விளையாட்டு மற்றும் விடுதி நாள் விழா– 2020



கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியில் 31.01.2020அன்று கல்லூரி, விளையாட்டு மற்றும் விடுதி நாள் விழா கொண்டாடப்பட்டது. உணவுப் பதப்படுத்தும் தொழில்நுட்பத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் த.ராமசாமி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் வே. அப்பாராவ் அவர்கள் 2019ஆம் ஆண்டிற்கான கல்லூரி ஆண்டு அறிக்கையை வாசித்தார். கல்லூரி விடுதிக் காப்பாளர் முனைவர் வி. பேராசிரியன், விளையாட்டுச் செயலாளர் முனைவர் ரா. மார்க்ஸ் நிர்மல் ஆகியோர் முறையே 2019ஆம் ஆண்டிற்கான விடுதி மற்றும் விளையாட்டு ஆண்டு அறிக்கைகளை வாசித்தனர். பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் (பொ.) முனைவர் சிசிலியா ஜோசப் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். விழாவின் சிறப்பு விருந்தினராகச் சென்னை கங்கா இனிப்புகள் மற்றும் உணவகங்களின் நிர்வாக இயக்குநர் திரு.என். செந்தில்குமார் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதி ஆண்டு மாணவர் பிரதிநிதிகள் செல்வி சி. தேன்மொழி, செல்வி ச. நிவேதாஸ்ரீ ஆகியோர் கல்லூரி அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். உணவுச் செயல்முறைப் பொறியியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அய்யாவூ பிரேம்நாத் மனோகரன் அவர்கள் நன்றி கூறினார்.

### தேசியப் பயிலரங்கு

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள அடிப்படை அறிவியல் புலத்தின் கீழ் இயங்கும் கால்நடை உயிர்த் தொழில்நுட்பத் துறைசார்பாக "விலங்கினப் புறச்சோதனைத் திசுவளர்ப்பு முறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள்" குறித்த தேசியப் பயிலரங்கு 22.01.2020 முதல் 24.01.2020 வரை நடைபெற்றது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஆய்வாளர்கள், மாணவர்கள்

மற்றும் பேராசிரியர்கள் என மொத்தம் 30 பேர் பயிலரங்கில் கலந்துகொண்டனர். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் 24.01.2020அன்று நடைபெற்ற பயிலரங்கின் நிறைவு நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துச் சான்றிதழ் வழங்கினார். அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் காதேவரு சரத்சந்திரா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பல்கலைக்கழகக் கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஜி. தினகர் ராஜ் அவர்கள் சிறப்புரை வழங்கினார். கால்நடை உயிர்த் தொழில்நுட்பத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் ம. பார்த்திபன் அவர்கள் பயிலரங்கு அறிக்கை அளித்தார்.

## பயிற்சியாளர் திறன் மேம்பாடு



பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்ககம்மூலம் சென்னை, வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை இயக்குநரக நிதியுதவியில் பயிற்சியாளர் திறன் மேம்பாடு குறித்த பயிற்சி, 08.01.2020அன்று நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் விரிவாக்கப் பயிற்சி மையங்கள், கல்லூரிகள் மற்றும் பண்ணைகளைச் சார்ந்த 30 பேர் பயிற்சியில் பங்கேற்றனர். பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பயிற்சிக் கையேடு வெளியிட்டுப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி நிறைவுரை ஆற்றினார். கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஜி. தினகர் ராஜ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பயிற்சி ஒருங்கிணைப்பாளர் மற்றும் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப் குமார் அவர்கள் பயிற்சி அறிக்கை அளித்தார்.

## பேராசிரியர்களுக்குப் பயிற்சி

பல்கலைக்கழக மைய ஆய்வகம்மூலம் “மாதவரத்தில் கால்நடை மற்றும் கோழியின நோய்கள் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் நிறுவுதல்” என்ற மாநில அரசின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் “கருச்சிதைவு மற்றும் காசநோய்” குறித்த பயிற்சி, 27.01.2020 மற்றும் 28.01.2020ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. பயிற்சியில் மொத்தம் 15 பேராசிரியர்கள் பங்கேற்றனர். பயிற்சியின் நிறைவு விழாவிற்குக் கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஜி. தினகர் ராஜ் அவர்கள் தலைமை வகித்துப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

## பயிலரங்கு



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வகம்மூலம் “பூஞ்சான நச்சுகள் அளவீடு மற்றும் தீவன மூலப்பொருட்களில் அகச்சிவப்பு நிறமாலைமானி கொண்டு தீவனம் / தீவனப் பொருட்களின் பொதுப் பகுப்பாய்வில் மேம்பாடு” குறித்த பயிலரங்கு, கால்நடை ஊட்டச்சத்தியல் பேராசிரியர்களுக்கு 06.01.2020 மற்றும் 07.01.2020ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பயற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார்.

## விவசாயிகள் – அறிவியலாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்



நாகப்பட்டினம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் மூலம் “அறிவியல் முறையில் நாட்டுக்கோழி வளர்ப்பு மூலம் நாகப்பட்டினம் மாவட்டத்தில் கஜா புயலால் பாதிக்கப்பட்டோரின் வாழ்வாதாரத்தை மறுசீரமைத்தல்” எனும் நபார்டு வங்கி நிதியுதவியிலான திட்டப் பயனாளிகளுடன் விவசாயிகள் – அறிவியலாளர்கள் கலந்துரையாடல் கூட்டம், வேதாரண்யம் வட்டம், தேத்தாகுடி தெற்கு கிராமத்தில் 29.01.2020அன்று நடத்தப்பட்டது. பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப் குமார் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார். திட்ட ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் சி. சுரேஷ் திட்டச் செயல்பாடுகளை எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு. பா. பிரபாகரன் அவர்கள் பங்கேற்றார். கூட்டத்தில் 50 விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## பண்ணைப் பள்ளி




கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் ஆத்மா திட்ட நிதியுதவியுடன் கரூர் மாவட்டத்தின் கடம்பன்குறிச்சியில் “அறிவியல் ரீதியான கறவை மாடு வளர்ப்பு” எனும் பண்ணைப் பள்ளியை நவம்பர் 2019முதல் ஜனவரி 2020வரை நடத்தியது. 14.01.2020அன்று நடைபெற்ற பண்ணைப் பள்ளியின் நிறைவு விழாவில் பங்கேற்ற கரூர் வேளாண் இணை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் திருமதி க. வளர்மதி அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். மொத்தம் 25 விவசாயிகள் பங்கேற்றனர்.

## கண்டுணர் பயணம்

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் கரூர் மாவட்டம், குளித்தலை வட்டார ஆத்மா திட்ட நிதியுதவியுடன் 50 விவசாயிகள் பயனடையும் வகையில் ஒரத்தநாடு, மரபுசார் கால்நடை மருத்துவப் பொருட்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் மற்றும் தஞ்சாவூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு 21.01.2020 மற்றும் 22.01.2020ஆம் தேதிகளில் கண்டுணர் பயணம் மேற்கொண்டது. மேலும், இம் மையம் மூலம் கரூர் மாவட்டம், கடவூர் வட்டார ஆத்மா திட்ட நிதியுதவியுடன் 50 விவசாயிகள் பயனடையும் வகையில் பொட்டனேரி, ஆடு ஆராய்ச்சி நிலையத்திற்கு 28.01.2020 மற்றும் 29.01.2020ஆம் தேதிகளில் கண்டுணர் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

## விழிப்புணர்வு முகாம்

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் “இயற்கை முறைக் கால்நடை வளர்ப்பு” எனும் விழிப்புணர்வு முகாமை 29.01.2020அன்று நடத்தியது. முகாமைக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் துவக்கிவைத்தார். புதுதில்லி, வேளாண்மை மற்றும் பதப்படுத்திய உணவுப் பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி முகமையின் ஆலோசகர் முனைவர் பீர் சிங் நெகி, ஐதராபாத், தேசிய இறைச்சி ஆராய்ச்சி மையத்தின் முதுநிலை அறிவியலாளர் முனைவர் பி. பஸ்வா ரெட்டி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விழிப்புணர்வு முகாமின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்கள் (இறைச்சி அறிவியல்) தொழில்நுட்பத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வி.வி. குல்கர்னி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். மொத்தம் 87 பண்ணையாளர்கள் உட்படப் பல்கலைக்கழகத்தின் 6 தொழில்நுட்பப் பணியாளர்கள் முகாமில் பங்கேற்றனர்.

- மேற்குறித்த கல்லூரியின் கால்நடை நுண்ணுயிரியியல் துறையும் பல்கலைக்கழக மைய ஆய்வகமும் இணைந்து கோழிப் பண்ணையில் “உயிர்ப் பாதுகாப்பு முறைகள்” பற்றிய விழிப்புணர்வு முகாமை 30.01.2020அன்று நடத்தின. முகாமில் மொத்தம் 50 கோழிப் பண்ணையாளர்கள் கலந்துகொண்டனர். கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் முகாமிற்குத் தலைமை வகித்தார்.

## பொங்கல் விழா

- கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரிவளாகத்தில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு, 10.01.2020அன்று ‘பொங்கல் விழா 2020’ கொண்டாடப்பட்டது. விழாவில் நடத்தப்பட்ட சிறப்பு விவாதத்திற்கு நடுவராகப் பேராசிரியர் பொ. வேட்டவராயன் அவர்கள் செயல்பட்டார். விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப் குமார் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து, வாழ்த்துரை வழங்கினார். உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் முனைவர் வே. அப்பாராவ் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய விடுதி வளாகத்தில் பாரம்பரிய பொங்கல் விளையாட்டுகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, 09.01.2020அன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் அ. பழனிசாமி அவர்கள்



விழாவிற்குத் தலைமை வகித்தார். கல்லூரியின் கால்நடைப் பண்ணை வளாகத்தில் 10.01.2020அன்று மாட்டுப் பொங்கல் கொண்டாடப்பட்டது.

- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பண்ணை வளாகத்தில் 10.01.2020அன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் மற்றும் கல்லூரிப் பணியாளர்கள் பங்கேற்றனர்.

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பண்ணை வளாகத்தில் 13.01.2020அன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் மற்றும் கல்லூரிப் பணியாளர்கள் பங்கேற்றனர்.

### தமிழ்நாடு சட்டப்பேரவைப் பொதுக்கணக்குக் குழுவினர் வருகை



மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு சட்டப்பேரவைப் பொதுக்கணக்குக் குழுவினர் 23.01.2020அன்று நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருத்துவமனைக்கு வருகை புரிந்து, மருத்துவமனையின் பல்வேறு பிரிவுகளைப் பார்வையிட்டுப் பொதுமக்கள் மற்றும் பேராசிரியர்களுடன் கலந்துரையாடினர். கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் பல்வேறு வசதிகள் மற்றும் சேவைகளை குழுவினர்க்கு விளக்கமாக எடுத்துரைத்தார்.

### தொழில்சார் சிறப்பு விரிவுரை

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை வணிக மேலாண்மைத் துறை தேசிய வேளாண் உயர் கல்வித் திட்டத்தின்கீழ் கல்லூரியின் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கு எதிர்கால வாய்ப்புப் பற்றிய புரிதல், வேலைவாய்ப்பு, ஊக்கமூட்டல் மற்றும் ஆளுமைத்திறன் வளர்ச்சி குறித்த தொடர் விரிவுரைகளுக்கு ஏற்பாடு செய்தது. இந்த வகையில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் முன்னாள் மாணவர்களான அமெரிக்காவின் ஹார்வார்டு மருத்துவப் பள்ளியின் அறிவியலாளர் முனைவர் கார்டிலியா மாணிக்கம் அவர்கள் “வெளிநாடுகளில் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள்” குறித்து 27.01.2020அன்றும், கெமின் நிறுவனத்தின் தெற்காசிய மண்டல இயக்குநர் மருத்துவர் சி. சுகுமார் அவர்கள் “கால்நடைத் தொழில் துறைகளில் வேலைவாய்ப்புகள்” குறித்து 25.01.2020அன்றும், சென்னை ஐடிகாட் கன்சல்டன்சி சேவை நிறுவனத் துணைத் தலைவர் மருத்துவர் பி.கிருஷ்ணதாசன் அவர்கள் “புற உலகில் வெற்றியடைய உங்கள் அக உலகை அறிந்து கொள்ளுங்கள்” குறித்து 25.01.2020அன்றும் சிறப்பு விரிவுரை வழங்கினர். மேலும், 23.01.2020அன்று “இந்தியா மற்றும் உலகளாவிய சூழலில் கால்நடை மருத்துவர்களுக்கான வாய்ப்புகள், விருப்பத் தேர்வுகள் மற்றும் சவால்கள்” குறித்து அல்லனா குழுமத்தின் இப்கோ முதன்மைச் செயல் அலுவலர் மருத்துவர் சி.கே. தோட்டா அவர்கள் விரிவுரை ஆற்றினார்.

### மாணவர்கள் சாதனை

கர்நாடக மாநிலத்தின் பிதார், கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 03.01.2020அன்று நடைபெற்ற தென்மண்டல இந்தியக் கால்நடை உடலியங்கியல் சங்கத்தின்



மண்டல அளவிலான வினாடிவினாப் போட்டியில் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பி.வி.எஸ்சி மற்றும் ஏ.எச் பட்ட நான்காம் ஆண்டு மாணவர்கள் செல்வன் ஆர். கார்த்திக் மற்றும் செல்வன் பி. பத்மநாபன் ஆகியோர் பங்கேற்று, மூன்றாம் பரிசு வென்றனர்.

### குடியரசு தின விருதுகள் – 2020

குன்றக்குடி, வேளாண் அறிவியல் நிலைய அறிவியலாளர்களுக்கு (முனைவர் எஸ். செந்தூர் குமரன் மற்றும் முனைவர் எல். விமலேந்திரன்) இரு விருதும், அந்நிலையத்தில் பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு (திரு. ஆப்ரகாம் மற்றும் திரு. கன்னியப்பன்) இரு விருதும் என நான்கு விருதுகள், சிறந்த முறையில் நுண்ணீர்ப் பாசனம் மற்றும் பயிர்கள் மற்றும் கால்நடைகளுக்கு ஏற்ற வகையில் உவர்நீரை நன்னீராக்கித் தந்த அவர்களின் அறிவியல் சேவைகளைப் பாராட்டிச் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 26.01.2020அன்று நடைபெற்ற குடியரசு தின விழாவில் அளிக்கப்பட்டன.

### புத்தகக் காட்சி



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயனடையும் வகையில் 31.01.2020அன்று “புத்தகக் காட்சியை” நடத்தியது. புத்தகக் காட்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. பழனிசாமி அவர்கள் துவக்கிவைத்தார். ஏழு புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் புத்தகக் காட்சியில் பங்கேற்றனர். மொத்தம் 3500 புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

### நாட்டுநலப் பணித் திட்டம்

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டம் மூலம்

**Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/05254**
**Date of publication : 25th and 26th of every month**

பெறுநர்

Printed and Published by Dr. K.N. Selvakumar, Director of Distance Education, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Old No. 327/New No. 485, Anna Salai, Nandanam, Chennai – 600035 on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University, Printed at University Printing Press, Mathur Road, Madhavaram Milk Colony, Chennai – 600051. Editor: Dr. K.N. Selvakumar, Ph.D.

“ஆரோக்கியமான இந்தியா – நடைப்பயிற்சி விழிப்புணர்வுப் பரப்புரைப் பேரணி” 23.01.2020 அன்று நடத்தப்பட்டது. பேரணியை



ஒரத்தநாடு, காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் திரு. வி. செங்கமலகண்ணன் அவர்கள் கொடியசைத்துத் துவக்கிவைத்தார். பரப்புரைப் பேரணியில் மாணவர்கள், பேராசிரியர்கள், காவல்துறை அலுவலர்கள் என மொத்தம் 150 பேர் பங்கேற்றனர். மேலும், கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவால் “தேசிய இளைஞர் தினம்”, சுவாமி விவேகானந்தர் அவர்களின் 157 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 10.01.2020 அன்று கல்லூரி விடுதியில் கொண்டாடப்பட்டது.


## பணி ஒய்வு



மாதவரம் பால்பண்ணை, பல்கலைக்கழக மைய ஆய்வகப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் 31.01.2020 அன்று பணி ஒய்வு பெற்றார். 13.01.1960இல் பிறந்த இவர், 28 ஆண்டும் 06 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் (பால்வள அறிவியல்) துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பி. தனலட்சுமி அவர்கள் 31.01.2020 அன்று பணி ஒய்வு பெற்றார். 22.01.1960இல் பிறந்த இவர், 31 ஆண்டும் 05 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூலக அறிவியல் துறைப் பணியாளர் திரு. பி.கே.விஸ்வநாதன் அவர்கள் 31.01.2020 அன்று பணி ஒய்வு பெற்றார். 05.01.1962இல் பிறந்த இவர், 34 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் அலுவலகப் பணியாளர் (முதுநிலை) திரு. ஆர். பழனிசாமி அவர்கள் 31.01.2020 அன்று பணி ஒய்வு பெற்றார். 03.01.1960இல் பிறந்த இவர், 21 ஆண்டும் 08 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சி. பாலசந்திரன், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் க.ந. செல்வக்குமார்
தொலைநிலைக் கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் தி.வ. மீனாம்பிகை
முனைவர் சி. மணிவண்ணன்
முனைவர் த. செந்தில்குமார்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் பா. மதுகேஸ்வரன்
முனைவர் ம. தங்கபாண்டியன்
மருத்துவர் கா.தீ. கவிதா